# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 03.04.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் தனது அடியானை எவ்வாறு மன்னிக்கின்றான்? அந்த தவறுகளை அல்லாஹ் எவ்வாறு போக்குகிறான்? என்பது பற்றி திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் விளக்கப்பட்டுள்ளது. இறைவன் அந்த தவறுகளைக் கண்டும் காணாமல் விட்டு விட்டு அதை மூடி மறைக்கவும் செய்கின்றான். சதர என்ற அரபிச் சொல்லுக்கு ஒரு பொருளை மூடி அதை பாதுகாப்பது என்று பொருள். நமது இறைவன் மிகவும் அன்பானவன் ஆவான். அவன் நமது எண்ணற்ற பாவங்களையும், தவறுகளையும் மூடி மறைக்கின்றான். அவைகளை கண்டும் காணாமல் விட்டு விடுகிறான். எந்தவொரு தவறுக்கும் அவன் உடனடியாக தண்டனை வழங்குவதில்லை.

ஒரு உண்மையான அடியான் தான் செய்த தவறுகளையும், பாவங்களையும் எண்ணி தன்னை சீர்திருத்திக் கொள்ள இறைவன் அவனுக்கு அவகாசம் வழங்குகிறான். மனிதன் தான் செய்கின்ற பாவங்களில் தைரியம் காட்டி மீண்டும் மீண்டும் அதில் மூழ்கி இருக்கக் கூடாது.

இறைவன் மனிதனுடைய பாவங்களை மூடி மறைக்கும் பொழுது மனிதன் தன்னை சீர்திருத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அவ்வாறு மனிதன் தன்னை சீர்திருத்திக் கொள்கின்றபோது அல்லாஹ்வின் மூடி மறைக்கும் பண்பை புதுப் பொலிவுடன் காண்பார்.

இப்போது நான் சில திருக்குர்ஆன் வசனங்களை உங்கள் முன் எடுத்து வைக்கிறேன். இந்த வசனத்தில் இறைவனுடைய இந்த பண்பிலிருந்து பலன் பெறுவதற்கு அல்லாஹ் நமக்கு சில விஷயங்களின் பக்கம் கவனமூட்டியுள்ளான்.

**அல்லாஹ் சூரா அன்கபூத்தில் இவ்வாறு கூறுகின்றான்.**

மேலும் நம்பிக்கை கொண்டு, நற்செயலாற்றியவர்களின் தீமைகளை நிச்சயமாக நாம் அவர்களை விட்டும் அகற்றி விடுவோம். மேலும் அவர்களது செயல்களுக்கு மிகச் சிறந்த நற்பலனை நிச்சயமாக நாம் அவர்களுக்கு வழங்குவோம். (29:8)

இங்கு அல்லாஹ் ஈமான் கொண்டு நற்செயல்கள் செய்பவர்களைப் பற்றி, அவர்களது தீமைகளை அவர்களை விட்டு அகற்றி விடுவோம் என்று கூறுகிறான். கஃபர என்ற சொல்லுக்கு அகராதியில், ஒரு பொருளை மறைத்து அதை முழுமையாக அழித்து விடுவது, திரையிடுவது என்று எழுதப்பட்டுள்ளது. தீமைகள் செய்பவர்களின் தீமையை தீமை செய்யாதது போன்று ஆக்கி விடுவது இதன் பொருளாகும்.

இறைவன் தனது அடியார்களின் மீது மிகவும் கருணை காட்டுபவன் ஆவான். அடியான் தவறிழைக்கும்போது அதற்கு உடனடியாக தண்டனை வழங்குவதும் இல்லை. அந்த தவற்றை பிறர் முன்னிலையில் வெளிப்படுத்துவதும் இல்லை. மனிதனின் தவறுகளை இறைவன் திரையிட்டு மறைக்கா விட்டால் சமூகத்தில் அவனால் முகம் காட்டக் கூட தகுதி இழந்து விடுவான். மனிதன் பல்வேறு பாவங்களைச் செய்கிறான். எண்ணற்ற தீமைகள் இழைக்கிறான். ஆனால் இறைவனுடைய சத்தார் என்ற பண்பு அதை மூடி மறைத்து விடுகிறது. தான் செய்த தவறுகளையும், பாவங்களையும் எண்ணி சீர்திருந்த முயற்சி செய்பவர்கள் தங்களது ஈமானில் உறுதியை மேற்கொள்கின்றனர். நற்செயல்கள் செய்வதன் பக்கம் கவனம் செலுத்துகின்றனர். இதை இறைவன் பார்க்கும் போது அவர் செய்த தீமையையும், பாவங்களையும் அவர் இதற்கு முன்னர் செய்யாதது போன்று அவரை விட்டு விலக்கி விடுகிறான்.

அந்த பாவங்களுக்கான தண்டனையை வழங்குவதும் இல்லை. அந்த பாவங்கள் மக்கள் மத்தியில் பரப்பப்படுவதும் இல்லை.

சமூகத்தில் சில பாவங்கள் வெளிப்பட்டு விட்டாலும், இறை மன்னிப்பை வேண்டுபவருடைய பாவம், குற்றம் மக்கள் மத்தியில் பரவாமல் அல்லாஹ் தடுத்து விடுகிறான். இதனால் அவருடைய கண்ணியத்தை அல்லாஹ் பாதுகாக்கிறான்.

சத்தார், மாலிக்காக இருக்கின்ற இறைவன் தவறிழைத்த மனிதன் தனது தவறை உணர்ந்து இறை மன்னிப்பை வேண்டும்போது அந்த குற்றம், குறைகளை மன்னிப்பது மட்டுமின்றி நன்மைக்கு நற்கூலியையும் வழங்குகின்றான். நன்மைக்கு பண் மடங்கு அதிகமாக கூலியை வழங்குகிறான். தீமை செய்கின்ற காலங்களிலும் மனிதன் சின்னச் சின்ன நன்மைக்கும் அல்லாஹ் நற்கூலியை வழங்குகிறான். இவ்வாறு நன்மையின் எண்ணிக்கை அதிகரித்து தீமையை மூடி விடுகிறது.

இறைவனிடம் மூடி மறைக்கும் குணத்தை வேண்டிக் கொண்டிருப்பவரே உண்மையான மூஃமின் ஆவார். தீமைகளைப் பற்றிய உணர்வு வந்த பிறகு அதிலிருந்து விலகி இருக்க வேண்டும். அவைகளை அழித்து விட முயற்சி செய்ய வேண்டும். தவறுகளைப் பற்றிய உணர்வு ஏற்படுகின்றபோது தவ்பா, இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு தவ்பா செய்தால் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப அவனது விருப்பத்தைப் பெறலாம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் தனது படைப்பால், இயல்பால் மிகவும் பலவீனமானவன். இறைவனின் நூற்றுக்கணக்கான கட்டளைகள் மனிதன் மீது சுமத்தப்பட்டுள்ளன. மனிதன் தனது இயல்பின் பலவீனத்தின் காரணமாக இறை கட்டளைகளைப் பேணுவது அவனால் முடியாமல் போகலாம்; நஃப்ஸே அம்மாரா – தீமையைத் தூண்டக்கூடிய ஆன்மாவின் அழுத்தத்தின் கீழ் வந்துவிடலாம். எனவே மனிதன் பலவீனத்தின் காரணமாக தீமை செய்த பிறகு தவ்பா செய்தால் இறைவனின் கருணை மனிதனை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பது மனிதனின் உரிமையாகும்.

அல்லாஹ்வின் பண்புகளை சரியாகப் புரிந்து கொள்ளும் வழி இதுவே ஆகும். இதை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான். அதிலிருந்து அவர்கள் நமக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இன்றைய காலத்தில் மார்க்கத்திற்கு தங்களை சொந்தக்காரர்கள் என்று கூறிக் கொள்கின்ற இந்த உலமாக்கள் இஸ்லாத்தின் இறைவனை மிகவும் கடுமையாக தண்டனை வழங்குபவனாக மக்களுக்கு காட்டுகின்றனர். இதன் காரணமாக கிறிஸ்தவர்களுக்கும், நாத்திகர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இஸ்லாத்திற்கு எதிராக பல கருத்துக்களை வெளியிடுகிறார்கள். ஆனால் இஸ்லாம் கூறுகின்ற இறைவன் சத்தார் – பாவங்களையும், குறைகளையும் திரையிட்டு மறைப்பவனும், ரஹீம் – கருணையாளனும் ஆவான்.

எனது பண்புகளை உங்கள் சக்திக்கும் தகுதிக்கும் ஏற்ப மேற்கொள்ளுங்கள் என்று அல்லாஹ் மூமின்களுக்கு கட்டளையிட்டுள்ளான். இவ்வாறு இறைப் பண்புகளை நாம் மேற்கொள்ளும்போது பாவங்களை மன்னிப்பது, திரையிட்டு மறைப்பது, கருணை காட்டுதல் ஆகிய பண்புகளின் வெளிப்பாட்டை சமூகத்தில் நாம் பெருமளவு காணலாம். இதை எண்ணிப்பார்க்கும் போது நம்மையும் அறியாமல் இறைவனைப் புகழ்வதன் பக்கம் நமக்கு கவனம் ஏற்படுகிறது. இதன் விளைவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீதும் ஒருவர் ஸலவாத் ஓதுகிறார். இறைவன் தனது முழுமையான மார்க்கத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறக்கி நம்மீது மாபெரும் அருள் புரிந்துள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள்:**

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான். அதன் கருத்து இதுவாகும். என் அடியார்களே! எனது கருணையின் மீது நம்பிக்கை இழந்து விடாதீர்கள். நான் கருணையாளன்; அருள்புரிபவன்; எல்லாரையும் விட உங்கள் மீது அதிக கருணை காட்டுபவன் ஆவேன். நான் கருணை காட்டுவதுபோல் வேறு யாரும் உங்கள்

மீது கருணை காட்டுவதில்லை. உங்கள் தந்தைகளை விட என்னை அதிகமாக நேசியுங்கள். ஏனென்றால் உங்கள் மீது அன்பு காட்டுவதில் அவர்களை விட நான் மேலானவன் ஆவேன். நீங்கள் என் பக்கம் வந்தால் நான் அனைத்து பாவங்களையும் மன்னித்து விடுவேன். நீங்கள் தவ்பா செய்தால் நான் அதை ஏற்றுக் கொள்வேன். என் பக்கம் நீங்கள் நடந்து வந்தால் நான் உங்கள் பக்கம் ஓடி வருவேன். தேடுபவர் என்னைக் கண்டு கொள்வார். என் பக்கம் குனிபவர் என் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டு கொள்வார். நான் தவ்பா செய்பவரின் பாவங்களை மன்னிக்கின்றேன். அவர் செய்த பாவங்கள் ஒரு மலையைவிடப் பெரியதாக இருந்தாலும் சரியே. எனது கருணை உங்கள் மீது மிக அதிகம் உள்ளது. கோபம் குறைவாக உள்ளது. ஏன்னறால் நீங்கள் எனது படைப்பினம் ஆவீர்கள். நானே உங்களைப் படைத்தேன். எனவே எனது கருணை உங்கள் அனைவரையும் சூழ்ந்துள்ளது.

இறைவன் பக்கம் வருவதற்கு இறைவனே வழிகாட்டியுள்ளான். இந்த வழியில் நடந்தால் இறைவனை நெருங்கலாம். எனவே ஈமானில் முழுமையடைய முயற்சி செய்யுங்கள். அல்லாஹ்வின் உரிமையை செலுத்துங்கள். அவனது அடியாரின் உரிமையை செலுத்துங்கள். நற்செயல்களைச் செய்யுங்கள். நற்செயல்களைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். என்னென்ன செயல்களைச் செய்ய வேண்டும்? அல்லாஹ் விரும்புகின்ற செயல்கள் யாவை? அல்லாஹ் விரும்பாத செயல்கள் யாவை? இதுபற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் விளக்கியுள்ளான்.

எனவே ஒரு மூஃமின் இறைவனின் கட்டளைகளைச் செய்யவும், இறைவன் தடுத்தவற்றிலிருந்து தவிர்ந்திருக்கவும் வேண்டும். இதன் மூலம் எப்போதும் இறைவனின் திரையிட்டு மறைக்கும் பண்பிலிருந்தும், கருணையிலிருந்தும் நாம் பலன்பெற்றுக் கொண்டிருக்கலாம்.

கடந்த குத்பாவில் நான் கணவன் மனைவிக்கு இடையில் இருக்க வேண்டிய உறவு தொடர்பாக கூறினேன். அதாவது சில வேளையில், கருத்து வேறுபாடு வருகின்ற போது ஒருவர் மற்றவர் மீது சேற்றை அள்ளி எறிகிறார். இது இறைவனுக்கு மிகவும் பிடிக்காதது என்று கூறினேன்.

அல்லாஹ் கணவனுக்கும், மனைவிக்கும் உள்ள பொறுப்பு பற்றி கவனமூட்டியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்.

அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்...... (2:188)

ஒருவருக்கொருவர் கொள்கின்ற உறவுகளை திரையிட்டு மறைப்பது இருவருக்கும் உரிய பொறுப்பாகும். திருக்குர்ஆனில் அல்லாஹ் ஆடைகளின் நோக்கத்தை விளக்கியுள்ளான். ஆடை 1) நிர்வாணத்தை மறைக்கிறது. 2) அழகு தருகிறது. 3) வெப்பம், குளிர் ஆகியவற்றிலிருந்து மனிதனை பாதுகாக்கிறது.

ஒரு ஆணும், பெண்ணும் ஒன்றாக இணைவதற்கு உடன்படிக்கை எடுத்துக் கொண்ட பிறகு ஒருவர் மற்றவரை தாங்கிக் கொள்ள வேண்டும்; பொறுத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவரது குறையை மறைக்க வேண்டும். சின்னச்சின்ன விஷயங்களுக்காக ஆண்கள் கோபப்படக் கூடாது. பெண்களும் கோபப்படக் கூடாது. ஒரு அஹ்மதி தம்பதியர் மிகவும் அழகான முறையில் வாழ்க்கை நடத்த வேண்டும். பிறருக்கு முன்னுதாரணமாகத் திகழும் அளவிற்கு ஒவ்வொரு அஹ்மதி தம்பதியரும் அழகிய முறையில் வாழ வேண்டும்.

சில நேரம் பெண்ணின் தரப்பிலிருந்து அல்லது மாப்பிள்ளையின் தரப்பிலிருந்து எங்களது உள்ளங்கள் இணையவில்லை; ஒத்துப்போகவில்லை என்று புகார் கூறுகிறார்கள். இந்த விஷயத்தை ஆராய்ந்து பார்த்தால் இருவரும் தத்தமது பொறுப்புகளை சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்று தெரிய வருகிறது. அல்லாஹ் திருமணம் முடித்துக்கொள்ள எதற்காக கட்டளை இட்டுள்ளானோ அந்த நோக்கத்தை இருவரும் புரிந்து கொள்ளவில்லை என்று தெரிய வருகிறது. சில நேரங்களில் வெறும் விளையாட்டாக திருமணம் செய்து கொண்டார்களோ என்று (நினைக்கத்) தோன்றுகிறது. இருவரிடமும் பொறுத்துக் கொள்ளும்

மனப்பான்மை அறவே இருப்பதில்லை. சின்னச் சின்ன விஷயங்களுக்காக பெரும் பெரும் சண்டையிடுகிறார்கள். மனதை நெருடக்கூடிய விளைவுகள் முன் வருகின்றன.

எனவே பிடிவாதம், பகைமை இதற்குப் பதிலாக இறைவனின் திருப்தியை நீங்கள் கண்முன் வையுங்கள். அவ்வாறு செய்தால், ஒருபோதும் பிரச்சனை வராது. எல்லா நிலையிலும் இறை திருப்தியை பெரும் நோக்கத்தோடு ஒருவர் மற்றவரின் நிம்மதிக்கு காரணமாக அமைய வேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டால் ஒருபோதும் உறவுகளில் விரிசல் ஏற்படாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் கோபத்திலும் உணர்ச்சிவசப்படுவதிலும் எல்லை மீறுகின்ற போது அனைத்து திரைகளும் கிழிந்து விடுகின்றன. எனவே கோபத்தை அடக்குவது மிகவும் அவசியமாகும். கோபத்தை அடக்குவது இறைவனுக்கு விருப்பமான செயலாகும். கோபத்தை அடக்குமாறு இறைவன் கட்டளையிட்டுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ள ஒவ்வொரு அஹ்மதியும் நான் என்னுடைய வாழ்வில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவேன் என்று உறுதிமொழி எடுத்துள்ளார். இந்த உறுதிமொழியை முழுமைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

எனக்கு சில நேரம் சில வீடுகளின் நிலை தெரிய வருகிறது. சில வீடுகளில் சின்னச்சின்ன கருத்து வேறுபாடுகள், பகைமையின் காரணமாக உறவுகளை முறிப்பது பற்றி பேசுகிறார்கள். இவ்வாறான சமயங்களில் எனக்கு ஒரு பெண் குழந்தையின் சம்பவம் நினைவுக்கு வருகிறது. அந்த குழந்தை ஒரு தம்பதியினருக்கு நல்ல பாடம் புகட்டினாள். அந்த சம்பவம் இதுவாகும். ஒரு கணவன் மனைவி மிகவும் உரத்த குரலில் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். இருவரும் கோபம் கொண்டு ஒருவரை ஒருவர் ஏசிக் கொண்டிருந்தார்கள். இதை ஒரு குழந்தை மிகவும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டே இருந்தது. இதை உணர்ந்த அவ்விருவரும் அந்த பெண் குழந்தையிடம் உனது தாய் தந்தை சண்டையே போட்டதில்லையா? அவர்கள் கோபப்பட்டதே இல்லையா? என்று கேட்டார்கள். அதற்கு அந்த குழந்தை, ஆம் கோபப்படுவார்கள். ஆனால் அம்மா கோபப்பட்டால் அப்பா அமைதியாகி விடுவார். எனது அப்பா கோபப்பட்டால் என் அம்மா அமைதியாகி விடுவார் என்று கூறினாள். ஆக இந்த பொறுமையை நாம் நம்மில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சில நேரம் சின்னச்சின்ன பிரச்சனைகளின் காரணமாக கணவன் மனைவிக்கு மத்தியில் திருமணமாகி சில நாட்களிலேயே உறவு முறிந்தது விடுகிறது. எங்கள் உள்ளம், ஒத்துப்போகாது என்று முடிவெடுத்து விடுகிறார்கள். உண்மை என்னவென்றால், இவர்கள் ஒருவருக்கொருவர் பொறுத்துக் கொள்வதில்லை. இரகசியங்களைப் பேணுவதில்லை. இவ்வாறு இரகசியங்களை வெளிப்படுத்தும்போது சமூகத்தில் பலரிடம் ஆலோசனை பெறப்படுகின்ற போது சிலர் சுய ஆர்வத்திற்காக தவறான ஆலோசனை வழங்கி விடுகிறார்கள். அல்லது சிலருக்கு தவறான ஆலோசனை வழங்கும் பழக்கம் இருக்கும். இதனால் அவர்கள் உறவுகளை பிரிக்கும் வகையில் ஆலோசனை வழங்கி விடுகிறார்கள். எனவே ஆலோசனை ஒரு அமனாத்தாகும். மாப்பிள்ளை அல்லது பெண் ஆலோசனைக்காக உங்களிடம் வந்தால் உறவு நீடிப்பதற்காக ஆலோசனை வழங்குங்கள். உறவுகளை முறிப்பதற்காக ஆலோசனை வழங்காதீர்கள்.

கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் நான் கூறுவது என்னவென்றால், கோபத்தை அடக்கினால்தான் குறைகளை மறைக்க முடியும். இறையச்சம் இருந்தால் தான் இது முடியும். எனவே தான் அல்லாஹ் ‘லிபாஸுத் தக்வா’ -வின் பக்கம் கவனமூட்டியுள்ளான்.

**அல்லாஹ் கூறுகின்றான்.**

ஆதமின் மக்களே! உங்கள் மானத்தை மறைக்கக் கூடியதும் அணிகலனாக இருக்கக் கூடியதுமான ஆடையினை உங்களுக்காக நாம் இறக்கியுள்ளோம். ஆனால் இறையச்சத்தின் ஆடை – அதுதான் சிறந்தது. இது அவர்கள் அறிவுரை பெறுவதற்கான அல்லாஹ்வின் கட்டளைகளைச் சார்ந்ததாகும். (7:27)

அல்லாஹ் உங்களது நிர்வாணத்தை மறைப்பதற்காக உங்களுக்கு ஆடையை வழங்கியுள்ளான். இதில் உங்களுக்கு அழகு உள்ளது. இது நமக்கு கிடைக்கும் வெளிப்படையான பலனாகும். இதை அல்லாஹ் கூறியுள்ளான். மனிதனை பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு ஆடை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மனிதனின் நிர்வாணம் மறைவதோடு அவனது அழகும் வெளிப்பட வேண்டும். ஆனால் உண்மையான ஆடை இறையச்சத்தின் ஆடையாகும்.

இங்கு நான் ஒரு விஷயத்தை விளக்க விரும்புகிறேன். ஒரு மூஃமினுக்கும் மூஃமின் அல்லாதவருக்கும் இடையில் பல தகுதிகள் உள்ளன. சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு நல்ல மனிதருக்கும் ஆடை அணிவதில் பல படித்தரங்கள் உள்ளன.

இன்றைய நாட்களில் மேற்கத்திய நாடுகளிலும், கிழக்கத்திய நாடுகளிலும் நிர்வாணத்தை வெளிப்படுத்துகிற ஆடையை Fashionable ஆடை என்று கருதி அணிகிறார்கள். அந்த ஆடையின் மூலம் அவர்கள் தங்களது உடலை வெளிக்காட்டுகிறார்கள். ஆண்களுக்கு உடலை முழுமையாக மறைக்கின்ற ஆடை அழகு என்று கூறுகிறார்கள். ஆனால் பெண்களின் ஆடை உடலை மறைக்காமல் இருக்க வேண்டும் என்று ஆண்களே விரும்புகின்றனர். பெரும்பாலான இடங்களில் இறையச்சம் என்ற ஆடை இல்லாத பெண்களும் இதையே விரும்புகின்றனர். சமூகத்தில் மிகவும் உயர்ந்தவர்கள் என்று மக்கள் கருதுவதற்காக ஆண்கள் கூட தங்கள் மனைவிகளின் ஆடை முழுமையாக இருக்க வேண்டும் என்று விரும்புவதில்லை. அவர்கள் அணிகின்ற ஆடை நிர்வாணத்தை மறைத்தாலும், மறைக்காவிட்டாலும் அதையே விரும்பி அணிகிறார்கள். இறையச்சம் உடைய மூஃமின் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கான வழிகளை பெற்றுத்தரும் வகையான ஆடைகளை அணிவர். இறையச்சம் என்ற ஆடையை நாம் தேடும் போதுதான் அது கிடைக்கும். ஒரு குறிப்பான கவனத்தோடு வெளிப்படையான ஆடையை நாம் அணியும்போது, கணவம் மனைவிக்கு மத்தியில் உள்ள இறையச்சம் என்ற ஆடையையும் நாம் பேணலாம். அவ்வாறே சமூகத்தில் மக்களோடு பழகும் போது குறைகளை திரையிட்டு மறைத்து இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் பழகும்போது ஒருவருக்கொருவர் பல கருத்து வேறுபாடுகளும், பகைமையும் ஏற்படும; நட்புறவும் ஏற்படும். ஆனால் ஒரு முஃமின் பகைமை கொண்டால் அவர் நட்புறவோடு இருந்த காலத்தில் தெரிய வந்த இரகசியங்களை பகைமை கொண்ட பின் மக்கள் மத்தியில் கூறி திரிய மாட்டார். அவ்வாறே உள்ளத்தில் இறையச்சம் கொண்ட ஒரு கணவன் மனைவி தமது இரகசியங்களையும் குறைகளையும் வெளியில் கூற மாட்டார்கள். மாறாக இறைவனது விருப்பத்தைப் பெறுவதற்காக எப்போதும் மூடி மறைப்பார்கள். ஆக தக்வாவின் ஆடை தான் மனிதனின் வெளிப்படையான ஆடையின் தரத்தை நிர்ணயிக்கிறது. இவ்வாறு ஒருவர் மற்றவரது குறையை மறைக்கும் தரத்தையும் நிர்ணயிக்கிறது. இறைவனின் முன் குனியாமல் இந்த தரத்தைப் பெறுவது முடியாது. ஏனென்றால், ஷய்த்தான் மனிதனுடைய இறையச்சம் என்ற ஆடையைப் பறிப்பதற்கு எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறான்.

**அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகிறான்.**

ஆதமின் மக்களே உங்களுடைய தாய், தந்தையரை தோட்டத்திலிருந்து –ய்த்தான் வெளியேற்றியது போன்று உங்களைத் தடுமாறச் செய்ய வேண்டாம்.... (7:28)

வெளிப்படையான ஆடையைப் பற்றி நான் உங்களுக்கு கூறினேன். ஒரு மூஃமின் நிர்வாணத்தை வெளிப்படுத்துகிற ஆடையை ஒருபோதும் அணியமாட்டார். இங்கும் (இலண்டன்) பாகிஸ்தானிலிருந்து எனக்கு சில ரிப்போர்ட்கள் வருகின்றது. அதாவது உலகத்தைப் பார்த்து சில அஹ்மதி பெண்கள் பர்தா அணிவதை தவிர்த்து விடுவது மட்டுமின்றி அவர்களுடைய ஆடையும் ஒழுங்காக இருப்பதில்லை. இவ்வாறான தீய செயலை தக்வாவின் ஆடை இல்லாதவர்தான் செய்வார்.

எனவே நான் ஒவ்வொரு அஹ்மதி ஆணுக்கும், பெண்ணுக்கும் கூறுகிறேன். சிறந்த ஆடை தக்வாவின் ஆடையாகும். இறைவனின் மூடி மறைக்கும் பண்பு நமது குறைகளை எப்போதும் மூடி வைப்பதற்காக அந்த சிறந்த ஆடையை அணிய முயற்சி செய்யுங்கள்.

மனிதனை நிர்வாணப்படுத்தவும், ஆடையைப் பறிக்கவும் முயற்சி செய்கின்ற ஷைத்தான் மூஃமின் அல்லாதவருக்கு நண்பன் ஆவான். ஈமான் இருந்தால், காலத்தின் இமாமை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால் ஒரு குறிப்பான முயற்சியோடு ஷைத்தானை நாம் எதிர்கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் நம்மை தக்வாவின் ஆடையைக் கொண்டு பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக.

நான் கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு நம்மீது மாபெரும் பொறுப்பு உள்ளது. நாம் நமது நிலைகளை மாற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். காலத்தின் அலையோடு அடித்துச் செல்பவர்களாக நாம் இருக்கக் கூடாது. ஒவ்வொரு நாளும் நமது தொடர்பு அல்லாஹ்வோடு அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். எப்போதும் லிபாஸுத் தக்வா – இறையச்சத்தின் ஆடையின் உண்மைத்துவத்தை நாம் புரிந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

ஒருவர் தமது கடந்த காலத்தில் சின்னச் சின்ன தவறுகள் செய்திருக்கலாம். ஆனால், தவ்பா செய்து விட்டால் அல்லாஹ் அவரது அனைத்து தவறுகளையும் மன்னித்து விடுகிறான். பிறகு அந்த மனிதனை இவ்வுலகிலும், மறு உலகிலும் அவமானப்படுத்துவது இல்லை. அல்லாஹ் ஒருமுறை மன்னித்து விட்டால் அதை இறைவன் பிறகு நினைத்துப் பார்ப்பதே இல்லை. இது இறைவனது அளப்பெரிய அன்பும், கருணையும் ஆகும். அந்த தவறுகளையெல்லாம் இறைவன் திரையிட்டு மறைத்து விடுகிறான். இறைவன் இவ்வளவு கருணையும், அருளும் செய்த பிறகும் மனிதன் நயவஞ்சகமான வாழ்க்கை வாழ்ந்தால் பிறகு அம்மனிதருக்கு பேரிழப்பாகும்; நஷ்டமாகும்.

மனிதன் தவறிழைப்பதிலும், பாவம் செய்வதிலும் தைரியம் காட்டாவிட்டால், அதிலிருந்து தவிர்ந்திருக்க முயற்சி செய்து கொண்டிருந்தால் இறையச்சத்தின் ஆடையை தேடிக் கொண்டிருந்தால் அல்லாஹ் அதன் மீது திரையிட்டு விடுகிறான். இதனால் பாவங்களின் அடையாளம் கூட அழிந்து விடுகிறது. பிறகு அந்த மனிதனை இறைவன் அவமானப்படுத்துவதில்லை.

இறைவன் ஒருவரை விரும்பி விட்டால் அவர் அவமானப்படுவதென்ன? அவர் மீது இறைவன் எண்ணற்ற அருட்களை இறக்குகிறான்.

**இது தொடர்பாக ஸூரா அந்நிஸாவில் அல்லாஹ் கூறுகிறான்.**

உங்களுக்குத் தடுக்கப்பட்ட பெரும் பாவங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால், நாம் உங்களின் சிறு குறைபாடுகளை உங்களை விட்டு அகற்றி விடுவோம். மேலும் பெரும் கண்ணியத்திற்குரிய இடத்தில் உங்களை நுழையச் செய்வோம். (4:32)

பெரிய பாவங்களிலிருந்து விலகியிருங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். பெரிய பாவங்கள் எவை? என்று தேட வேண்டும் என்பது இங்கு பொருள் அல்ல. உண்மையான மூஃமின் எல்லா வகையான பாவங்களிலிருந்தும் விலகி இருப்பார். ஏனென்றால் இறைவனின் மூடி மறைக்கும் பண்பு எல்லா வகையான பாவங்களையும் மூடி மறைக்கிறது. பெரிய பெரிய பாவங்களை மட்டும் செய்யாமல் இருந்தால் போதும். சின்னச்சின்ன பாவங்கள் செய்தால் ஒன்றும் தவறு அல்ல என்று பொருள் அல்ல. அல்லாஹ் பெரிய பெரிய பாவங்களிலிருந்து விலகி இருங்கள் என்று கூறுவதன் பொருள் எல்லா வகையான பாவங்களையும் விட்டு விடுங்கள் என்பதாகும். ஏனென்றால் திருக்குர்ஆனில் பெரிய பாவங்கள் சிறிய பாவங்கள் என்று எந்த பட்டியலும் இல்லை.

அல்லாஹ் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டுள்ள ஒரு செயலை செய்தல் பாவமாகும்.

இறைவன் எந்த செயலை செய்யக்கூடாது என்ற ஒரு மூஃமினுக்கு கட்டளை இட்டுள்ளானோ அதை விட்டு விலகுவதில் சிரமம் ஏற்பட்டால், அது சின்ன விஷயமாக இருந்தாலும், பெரிய விஷயமாக இருந்தாலும் அது அந்த மனிதரைப் பொருத்த அளவில் மிகப்பெரிய பாவமாகும்.

எனவே ஒரு கஷ்டமான செயல் மீது நீங்கள் உறுதிகொண்டு விட்டால் அதை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டால் பிறகு எளிதாக விட்டுவிடக்கூடிய பல செயல்களை நாம் மிகவும் எளிதில் விட்டுவிடலாம்.

திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் சிலர், எல்லா வகையான பாவங்களும் பெரிய பாவத்தில் அடங்கும் என்று கூறியுள்ளார்கள்.

எனவே கடுமையான நிலைக்கு நீங்கள் ஆளாவதற்கு முன்பாகவே நீங்கள் உங்களை சீர்திரத்திக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்தால் இதுவரை நமது பாவங்களை மன்னித்து வந்த இறைவன் நமது பாவங்களை இன்னும் மூடி மறைப்பான். அவனுக்கு நன்றி கூறியவாறு, நன்மையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இதற்கு இறைவனின் பார்வையில் நற்கூலி நிச்சயம் உண்டு. அவ்வாறு செய்தால் தீமை வெளிப்படாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சிறிய பாவங்கள் அல்லது பெரிய பாவங்களை அல்லாஹ் ஒருமுறை மன்னித்த பிறகு அதை சொல்லிக் காட்டுவதில்லை.

அல்லாஹ் ஓரிடத்தில் பெரிய பாவங்களை இன்னும் சில பாவங்களோடு இணைத்துக் கூறி எந்த பாவமும் பெரிய பாவமாக மாறக்கூடும் என்பதை விளக்கி விட்டான்.

சூரா அஷ்ஷுூராவில் அல்லாஹ் கூறுகிறான்:

அத்தகையோர் பெரும் பாவங்களிலிருந்தும் தீய நடத்தைகளிலிருந்தும் விலகிக் கொள்வார்கள். அவர்களுக்கு கோபம் ஏற்படும் போது அவர்கள் மன்னித்து விடுகின்றனர். (42:38)

இங்கு அல்லாஹ் ஈமான் கொண்டோரின் அடையாளங்களை விளக்கியுள்ளான். அதாவது அவர்கள பெரிய பாவங்களிலிருந்து தவிர்ந்திருப்பார்கள். வெட்கக்கேடான செயல்களிலிருந்து தவிர்ந்திருப்பார்கள். ஆக, இங்கு மூன்று விஷயங்களை அல்லாஹ் ஒன்றாக இணைத்துக் கூறியுள்ளான்.

இங்கு கவனிக்கத்தக்க ஒரு விஷயம் உண்டு. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெட்கத்தை ஈமானில் ஒரு பகுதியாக குறிப்பிடுகிறார்கள்.

Fashion –ன் பின்னால் செல்பவர்கள், நிர்வாணத்தை வெளிக்காட்டும் ஆடை அணிபவர்கள், வெட்கத்தை அறவே விட்டு விடுபவர்கள் ஆகிய இவர்கள் அனைவரும் மிகவும் கவலைக்குரிய நிலையில் உள்ளனர். அல்லாஹ் குறைகளை மூடி மறைக்க விரும்புகிறான். பாவங்களை மன்னிக்க விரும்புகிறான். மனிதன் இறைவனின் பக்கம் நடந்து சென்றால், இறைவன் மனிதனின் பக்கம் ஒடி வருகிறான். ஆனால் மனிதன் இவ்வளவு அருட்கொடைகளிலிருந்தும் பலன் பெறுவதில்லை. இது எவ்வளவு பெரிய இழப்பாகும்!

கோபப்படுவதையும், உணர்ச்சிவசப்படுவதையும் அல்லாஹ் பெரிய பாவங்களோடும், வெட்கக்கேடான காரியங்களோடும் இணைத்துக் கூறியுள்ளான். ஏனென்றால் கோபப்படுவது ஈமானை பலவீனமாக்கி விடுகிறது. கோபத்தால் பல்வேறு பாவங்கள் உருவாகின்றன. சமூகத்தின் அமைதி கோபத்தால் கெட்டு விடுகிறது.

இறைவனின் கட்டளைகளை எவ்வளவோ மனிதன் மீறி விடுகிறான். அதைப் பற்றி எண்ணிக்கூட பார்ப்பதில்லை. ஆனாலும் அல்லாஹ் அந்தப் பாவங்களை மூடி மறைத்து விடுகிறான். தண்டனை வழங்க இறைவனுக்கு முழு ஆற்றல் இருந்தபோதிலும் துன்திகாம் – பழிவாங்குபவனாக இருந்தபோதிலும் இறைவன் பாவங்களை மன்னித்து விடுகிறான். ஆனால் மனிதனோ சின்னச் சின்ன விஷயங்களிலும் கோபப்பட்டு, உணர்ச்சிவசப்பட்டு குழப்பத்திற்கு ஆளாகி விடுகிறான்.

எனவே, உண்மையான மூஃமின் ஆவதற்கு உங்களது கோபத்தை கட்டுப்பாட்டின் கீழ் வையுங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். கோபப்படுகின்ற போது மனிதன் பிறருடைய குறையை எடுத்துரைக்கிறான். திரையைக் கிழித்து விடுகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத் ஒருவருக்கொருவர் உண்மையான நேசம் கொள்ளாத வரை வளர்ச்சி அடையாது. ஆற்றல் பெற்ற ஒவ்வொருவரும் பலவீனமானவரை நேசிக்க வேண்டும். ஒருவர் இன்னொருவரின் குறையைக் கண்டு ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளாமல் வெறுப்போடும், அருவருப்போடும் நடந்து கொள்கிறார் என்றால் அவர் அவருக்காக துஆ செய்திருக்க வேண்டும். அன்பு செலுத்தியிருக்க வேண்டும். மிகவும் மென்மையாகவும், ஒழுக்கத்துடனும் அவருக்குப் புரிய வைத்திருக்க வேண்டும். ஆனால் இதற்கு பதிலாக வெறுப்பை வளர்த்துக் கொண்டு மன்னிக்கவில்லை என்றால் இரக்கம் காட்டவில்லை என்றால் இதன் முடிவு தீயதாகி விடுகிறது. இறைவனுக்கு இது விருப்புடையது அல்ல. சிலர், சிலரை நேசிக்கின்ற போதுதான் ஜமாஅத் உருவாகிறது. குறைகளை திரையிட்டு மறைக்க வேண்டும். இந்த நிலை ஏற்பட்டு விட்டால் ஓர் உயிராக இருந்து ஒருவர் மற்றவருக்கு உறுதுணையாக ஆகி விடுகிறார். ஒருவர் மற்றவரை உடன்பிறந்த சகோதரரை விட மேலானவராக கருதுகிறார். இவ்வாறு ஒருவர் மற்றவருடைய உடலுறுப்பு போல் ஆகி விட வேண்டும்.

ஆக, நாம் இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரின் ஜமாஅத்தில் இணைந்துள்ளோம். நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின்படி வந்துள்ள தூதரை ஏற்றுக் கொண்டுள்ளோம். நாம் இக்காலகட்டத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளாமல் ஈமானின் படித்தரம் முழுமை அடையாது என்று பிரகடனம் செய்கிறோம். நாம் இந்த மஸீஹ் மற்றும் மஹ்தியின் மீது ஈமான் கொண்டால்தான் இறைவனின் திருப்தியைப் பெற முடியும் என்று பிரகடனம் செய்கிறோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனை இப்போது முஹம்மதிய மஸீஹ் மூலம்தான் உலகில் பரவும் என்று நாம் கூறுகிறோம். இதை நாம் உலகின் முன் பிரகடனம் செய்கிறோம் என்றால் நமது இபாதத்தின் தரம் பற்றியும் சற்று கவனிக்க வேண்டும். நமது செயல்களையும் கண்காணிக்க வேண்டும். அல்லாஹ் செய்யக்கூடாது என்று குறிப்பிட்டுள்ள அனைத்து பாவங்களையும் நாம் விட்டுவிட வேண்டும். நமது வெட்க உணர்வையும் நாம் மேம்படுத்த வேண்டும். நமது கோபத்தையும் உணர்ச்சிவசப்படுவதையும் கைவிட வேண்டும். இதன் மூலம் நாம் எங்கு இறைவனுடைய மூடி மறைக்கும் பண்பிலிருந்து பலன் பெறுவோமோ அங்கு உலகிற்காகவும் ஒரு முன்மாதிரி ஆகலாம்.

அல்லாஹ் நம்மை திருக்குர்ஆனின் இந்த துஆவிற்கு வாரிசாக்குவானாக.

**அல்லாஹ் கூறுகிறான்:**

எங்கள் இறைவா! நீ எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக. எங்கள் தீமைகளை எங்களிடமிருந்து அகற்றுவாயாக. எங்களை நல்லடியார்களுடன் மரணிக்கச் செய்வாயாக. (3:194)

உனது அன்பிற்குரியவர்களோடு எங்களையும் சேர்ப்பாயாக! நாங்கள் எப்போதும் உனது மூடி மறைக்கும் பண்பிலிருந்து பலன் பெறுபவர்களாக எங்களை ஆக்குவாயாக! ஆமீன்!

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 03.04.2009

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**